2024 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

சார்–பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***38526—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடபழனி, அழகிரி நகர், 5-வது தெருவில் உள்ள சார்–பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வடபழனி, அழகிரி நகர், 5-வது தெருவில் தனியார் கட்டடத்தின் முதல் மாடியில் இயங்கி வந்த மத்திய சென்னை பதிவு மாவட்டம், கோடம்பாக்கம் சார்–பதிவாளர் அலுவலகம், மாற்றுத் திறனாளிகள் வசதிக்காக, அவர்கள் எளிதில் வந்து செல்வதற்கு ஏதுவாக சார்–பதிவாளர் அலுவலகங்கள் இருக்க வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தற்போது ஜவஹர்லால் நேரு சாலை, 100 அடி ரோட்டிலுள்ள தனியார் வாடகைக் கட்டடத்தில் தரைதளத்தில் இயங்கி வருகிறது. கோடம்பாக்கம் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நிலத்தை தேர்வு செய்யும் பணி, எழும்பூர் மற்றும் அமைந்தகரை வட்டாட்சியர் ஆகியோரால் நடைபெற்று வருகிறது. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின், சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனி, அழகிரி நகர், 5-வது தெருவில் அமைந்துள்ள*

சார்–பதிவாளர் அலுவலகம் தற்போது இடம் மாற்றப்பட்டுள்ளது. மீண்டும் அதே இடத்தில் சார்–பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடம்பாக்கம் சார்–பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதியில் சுமார் 96X90 சதுரடியில், அதாவது 8,640 சதுரடி பரப்பளவு கொண்ட ஓர் இடத்தினைக் கண்டறிந்து, தேர்வு செய்து கொடுத்தால் உடனடியாக புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.

திரு. ஜெ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தியாகராய நகர் தொகுதியைச் சார்ந்த வடபழனி, மேற்கு மாம்பலம், அசோக் நகர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய சார்–பதிவாளர் அலுவலகம் கே.கே. நகர் பகுதியில் செயல்பட்டு வந்தது. தற்போது அந்த பத்திரப் பதிவு அலுவலகம் முகப்பேர் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் அந்தப் பகுதிவாழ் மக்கள் இங்கிருந்து முகப்பேர் வரை சென்று வர மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, தொகுதிக்குள்ளே ஒரு சார்–பதிவாளர் அலுவலகம் கொண்டுவரப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் இல்லாதபட்சத்தில் அங்கிருக்கக்கூடிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. இடம் இருக்கும்பட்சத்தில் அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

2024 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*